ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனுல், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானுலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானுலும்சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம்அதிகமாக ஏருவிடினும், மயிர் உதிர்வதுமட்டும் தவறுவதேயில்லே. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சைசெய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலேயும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணேயிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலேக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால் பங்காகிக் குறைத்துவிட்டால். கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப்பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச்சிறந்தது என்று தெரிய வந்தால், கேசவர்த்தினியைமுதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலேகாப்பது, விருத்தி செய்வது அழகுபடுத்துவது. விலே அணு 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலே,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

அம்ருதம் போன்ற

ஏ. பி. யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய் வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களேயும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்.

டோபரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்



"உஷா"

மெஷின்களேயே வாங்குங்கள்.

மலிவானதும், அழுத்தமானதுமானசுதேசி தையல் மெஷின் இதனுல் பூரா திருப்தியடையுங்கள்.

உஷா தையல் மெஷின் பிரத்யேக பாகங்களே வாங்குங்கள். எல்லா தயாரிப்பு மெஷின்களுக்கும் தகுந்தவை. எமது பாகங்களே மாற்றிக்கொள்ளலாம். இயந்திரததால் செய்யப்படுபவை. உயர் ரகம். திறமையான வேலேப்பாடு. மிகக் குறைந்த விலேயில் ஏராளமான சப்ளேகள் கிடைக்கும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஜே எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்.,
C/o Mr. பயரிலால் மல்ஹோத்ரா,
1, மலனி ரோட், தியாகராய நகர், மதராஸ்.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொதுமக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம். இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லே. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின நிறம் மாருமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோல "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளேயல்கள் 2ஜதை தோடுகள் 2மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும் இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத் தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக்இனும்

London Commercial Co.,

(EAB) Post Box 165 (S M M) LAHORE (India).

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலேவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலே ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு

அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலே, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

குறைந்த விலேயில் கொசு வலேகள்

எமது வலேகள் அழுத்தமானவை. நான்கு முனேகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

நீளம்	அகலம்	உயரம்	சாதா ரூ.	உயர் ரூ.	சிறந் ரூ.
6அடி	$3\frac{1}{2}$அடி	$3\frac{1}{2}$அடி	2-0	2-4	3-10
6 ,,	4 ,,	4 ,,	2-4	2-8	4-2
$6\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	2-8	3-0	5-2
7 ,,	5 ,,	5 ,,	3-0	3-8	6-0
$7\frac{1}{2}$,,	6 ,,	6 ,,	3-8	4-0	7-2

மூன்று சேர்த்தாற்போல் வாங்கினல் 6 அடி X 4 அடி X 4 அடி வலே ஒன்று இனும். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (H 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 33 13-9-'42 Price 2 Annas



இயற்கையான வளர்ச்சையுடன்

அடங்கிய விருப்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தருர்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

நியூயார்க்கில், அணிவகுப்பு

ஐக்கிய நாடுகளின் யுத்த அணி வகுப்பு ஒன்று நியூயார்க்கில் ஜூன் 13-ம்தேதி நடைபெற்றது. அதில் இந்தியாவுக்கும் தனி ஸ்தானம் அளிக்கப்பட்டது.



இந்தியாவிலே முக்கியமாக மூன்று ராஜீய ஸ்தாபனங்கள் உழைத்து வருகின்றன. அவை காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஹிந்துமகாசபை. காங்கிரஸ் தாய் ஸ்தாபனம். தாய் நாட்டிலுள்ள மக்களனைவருடைய க்ஷேமத்தைக் கோருவது. முஸ்லிம் சமூகத்திற்குச் சலுகை தேடிக் கொடுக்க லீக் பிறந்தது; மிதமிஞ்சிய சலுகை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் ஹிந்து மகாசபை தோன்றிற்று. மூன்றுக்கும் லக்ஷியம் ஒன்றுதான்; அன்னிய ஆட்சியை யாரும் வேண்டவில்லை.

பயன்படுத்திக்கொள்வாரா?

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

அதிகாரம் மாறவேண்டும். யாரிடம் மாற்றுவது? ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையுமிருந்தால் இந்தக் கேள்வி எழுவதற்கே இடமில்லை. இயற்கையிலேயே ஆக்க வேலை சிரமம்; அழிவு வேலை சுலபம். அன்யோன்யத்தைக் குலைக்கப் பல சக்திகள் வேலை செய்து வந்திருக்கின்றன. தீய சக்திகளை விலக்க இயலவில்லை. அவை விளைவித்து வரும் தீங்கைத் தவிர்க்கவும் முடியவில்லை. அன்னிய ஆட்சியுள்ளளவும் அவை மறையாதென்ற முடிவுக்குக் காங்கிரஸ் வந்துவிட்டது.

அதிகாரத்தை மாற்றுங்கள்! யாரிடம் மாற்றினாலென்ன? அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலையென்று காங்கிரஸ் கேட்கப் புறப்பட்டது. மாற்றாவிட்டால் நிர்ப்பந்த முறைகளில் இறங்குவோம் என்றும் சொல்லத் துணிந்தது. சொன்னதுதான் தாமதம்! அடக்கு முறையில் இறங்கிவிட்டனர். பிற நாட்டினர் பழிக்க இடமில்லாமல் யுத்த நிலைமை உதவி வருகிறது. அதிகாரம் மாறினால் யுத்த நிலைமை தெளிய உதவும் என்று யார் சொன்னாலும் ஏறவில்லை. குழப்பமும் கலவரமும் நியாயமான கக்ஷிக்கு வலுவூட்டுபவையல்ல. அடக்கு முறைக்கு ஆதாரங்களையே வழங்குகின்றன.

காங்கிரஸ் உழைக்க வசதியில்லாமல் செய்துவிட்டனர். அதிகாரம் மாறுவதில் அக்கரை காட்டி வந்த பாக்கி இரு கட்சிகளும் என்ன செய்கின்றன? ஒன்று முஸ்லிம் ஸ்தாபனம்; இன்னொன்று ஹிந்து ஸ்தாபனம். இரண்டும் கூடி ஒரு முடிவுக்கு வருமாயின் காங்கிரஸின் ஆத்மசமர்ப்பணமும் நாட்டுக்கு உதவியதாகச் சொல்ல இடமுண்டு. காங்கிரஸ் மீது பாணம் தொடுத்த ஒருவாரத்திற்குப் பிறகே முஸ்லிம் லீக் கௌன்சில் கூடிற்று. லீகுக்குள்ள பலமெல்லாம் சாயாபலம்; சுயபலமல்ல. லீக் அதை அறியவில்லை. காங்கிரஸைப் பழித்தால் தனக்குப் பெருமையென்று எண்ணிக் கொண்டு விட்டது.

தன் கோரிக்கைகளை இன்னும் ஒருபடி அதிகமாக வகுத்துக்கொண்டது லீக். கேட்பது சுலபம்; கொடுப்பது யார்? காங்கிரஸை லக்ஷியம் செய்யாதவர்கள் லீகையா மதிக்கப்போகிறார்கள்? நெருக்கடியைத் தீர்க்கவும் நேர்மையாக நடக்கவும் அரிய சந்தர்ப்பம் வாய்த்தது ஜனாப் ஜின்னாவுக்கு. அவர் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கோபுரத்தின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டு சமரசம் பேசத் தயார் என்கிறார். யாரிடம் பேசுவது? சிரத்தை காட்டியவர் சிறையிலிருக்கின்றனர். அவர்கள் வெளிவராத வரையில் ஜனாப் ஜின்னாவை யார் சீந்துவர்? ஒதுங்கி நிற்பது யாருக்குப் பிரீதி என்பதை அவரே யோசித்துப் பார்த்தால் புரியும்.

ஹிந்து மகாசபை இந்த நிலைமையில் சமயோசித புத்தியைக் காட்டியது குறிப்பிடத்தக்கது. அதிகாரம் மாறவேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்தியதை அது ஆதரித்திருக்கிறது. மாற்றுவது உண்மையானால் இன்றே மாற்றவேண்டுமென்றும் சொல்லிவிட்டது. லாகூரில் டாக்டர் முகர்ஜி பேசியபோது சமரஸத்தில் தமக்குள்ள சிரத்தையை விசதமாக விளக்கியிருக்கிறார். "முஸ்லிம்கள் கோருவது பாகிஸ்தான்; பொதுஜன வாக்கெடுத்து அதை நிர்ணயிக்கவேண்டும் என்கிறார்கள். யுத்தம் முடிந்த பின் அதைத் தீர்த்துக்கொள்வோம்; இன்று அதிகாரத்தை ஏற்க முன் வாருங்கள்; எல்லாரும் சேர்ந்து தாற்காலிக கவர்ன்மெண்டை அமைப்போம்" என்கிறார் ஸ்ரீ முகர்ஜி. நழுவவிட்ட சந்தர்ப்பத்தை மீட்க இது ஜனாப் ஜின்னாவுக்கு வசதியளிக்கிறது. பயன்படுத்திக் கொள்ள முற்படுவாரா?



மாஸ்கோ சந்திப்பு

மாஸ்கோவுக்கு சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் சென்று, ஸோவியத் குடியரசுத் தலைவரான ஸ்டாலினுடன் சம்பாஷித்தார் இவர்களுடன் மிஸ்டர் ஹாரிமனும் இருந்தார்.

சென்றவார நிகழ்ச்சிகள்

ஹிந்து மகாசபை விடுத்துள்ள கடிதம்

நாட்டிலுள்ள பிரதான ராஜீயக் கட்சிகளுடன் சமரஸப் பேச்சை ஆரம்பிக்கும் தங்கள் திட்டத்தின்முதல் வேலையாக அகில இந்திய ஹிந்துமகாசபை நியமித்த எழுவரடங்கியகமிட்டியினர் தலைவர்களுக்கு ஒரு கடிதம் விடுத்திருக்கின்றனர். இக்கடிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், முஸ்லிம் லீக், சீக்கியர், களின் தலைவர், இந்தியக் கிறிஸ்தவர் இவர்களுக்கு அனுப்பட்டிருக்கிறது. கடிதத்துடன் ஹிந்து மகாசபையின் தீர்மான நகல் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது. தீர்மானத்தில் அடங்கியுள்ள கோரிக்கைகளை ஆதரிக்கும்படிக் கேட்கப்பட்டிருக்கிறது.

கடிதத்தின் விவரம் பின்வருமாறு:—

அதிகாரத்தைவிட்டுச் கொடுக்க பிரிட்டிஷ் ஸர்க்காருக்கு மனமிருக்கிறதா இல்லையா என்பதே முக்கியமான விஷயம். பிரிட்டிஷ் ஸர்க்கார் அதிகாரத்தை இந்தியர் வசம் மாற்றத் தயாராயிருந்தாலன்றி தற்போதைய நெருக்கடி நீடிக்கவே செய்யும்: அப்பால் யுத்தம் நடக்கும்பொழுது எவ்வித இடைக்கால ஏற்பாட்டுக்கும் வழியில்லாமல் போய்விடும். ஸர் க்ரிப்ஸே இது மாதிரி கூறியிருக்கிறார்; ஆனால் இதை இந்தியாவிலுள்ள முக்கியமான கட்சிகள் அங்கீகரிக்கவில்லை, உடனே இப்பொழுதே அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை. யுத்தம் வெற்றிகரமாக நடப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகள் உண்டோ அவற்றைச் செய்துகொண்டு, அவற்றிற்குக் குந்தகமில்லாமல் மேற்படி கோரிக்கையைப் பூர்த்தி செய்யலாம். துளிக்கூடத் தாமதமின்றி இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்படவேண்டும். தேசப் பாதுகாப்புக்காக இந்தச் சர்க்கார் நாட்டின் ஆள் பலத்தையும், இதர வசதிகளையும் ஒன்று திரட்டவேண்டும்.

திருப்திகரமான முறையில் இடைக்கால ஏற்பாடு ஒன்றை வகுக்க உண்மையில் முயன்றால் நாட்டிலுள்ள முக்யமான ராஜீயக் கட்சிகளின் நல்லெண்ணத்துடன் நெருக்கடியைத் தீர்த்துவிடலாமென்பதே எங்கள் நம்பிக்கை.

பல முக்கியமான பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன என்பதை நாங்கள் அறிவோம். சுயேச்சை இந்தியாவின் அரசியலை வகுக்கையில் இப்பிரச்னைகள் கிளம்பும். ஆனால் தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதில் இவைமுட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. யுத்தத்துக்குப் பிறகு கவனித்துக் கொள்ளலாமென்று இவற்றை விட்டுவிட வேண்டும்.

நாட்டிலுள்ள முக்கியமான ராஜீயக் கட்சிகளும், கோஷ்டிகளும் ஒரே முகமாக நின்றால் பிரிட்டிஷ் ஸர்க்கார் இணங்கி, இந்தியாவுடன் சமரஸம் செய்துகொண்டே ஆகவேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். அத்தகைய ஒருமைப்பாட்டிற்கும் கண்ணியமான முறையில் இந்திய பிரிட்டிஷ் சமரஸத்தை கோரவும் தங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் நாங்கள் நாடுகிறோம். தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பீர்களென்று நம்புகிறோம்."

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீ கே. எம். முன்ஷி, ஸ்ரீ புலாபாய் தேஸாய். ஜனாப் ஜின்னா, ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரூ இவர்கள் உள்பட சுமார் 30 தலைவர்களுக்கு மேற்படி கடிதம் அனுப்பபபட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * * * *



இரண்டு பிரதம மந்திரிகள்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் கெய்ரோவுக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் அங்கு வந்திருந்த தென்னாப்ரிகா பிரதம மந்திரி பீல்ட் மார்ஷல் ஜே. ஸி. ஸ்மட்ஸுடன் சம்பாஷித்தார்.

ஸர் நூனுக்கு எல்லைப்புறத் தலைவர் பதில்

பிஷாவர் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஹக்கீம் அப்துல் ஜலீல் நத்வி, ஸர் பிரோஸ் கானின் அலிகார் பிரசங்கத்தைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார். முஸ்லிம் லீக் ஹிந்து மகாசபை இவ்விரண்டின் அங்கீகாரமுமிருந்தால் இந்தியாவின் எதிர்கால அரசாங்கம் சம்பந்தமாக எந்த திட்டத்தையும் ஏற்பதில் காங்கிரஸுக்கு எவ்வித ஆட்சேபமுமிராதென்று அவர் கூறியிருக்கிறார்.

ஹக்கீம் நத்வி கூறியிருப்பதாவது:—

ஸர் பிரோஸ் கான் நூன் காங்கிரஸ் கொள்கையைகண்டித்திருக்கிறார். நிர்ப்பந்தம் மூலம் தன் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்துகொள்ள அது பார்ப்பதாகவும் அவர் கூறினார். உண்மை என்னவெனில் கடைசி நேரம் வரையில் சமரஸமாகப் போகவேண்டுமென்றே காங்கிரஸ் முயன்றது. அதன்கோரிக்கைகள் விஷயத்தில் சர்க்கார் அலட்சியமாக இருந்ததால் ஒத்துழையாமையில் இறங்க காங்கிரஸ் உத்தேசித்திருப்பதாக வெளியிட்டது உண்மையே. ஆதலால் அது வைஸ்ராயுடன் கடிதப் போக்குவரத்து நடத்தும்படி மகாத்மாவுக்கு அதிகாரமளித்தது. அவசியமெனப்பட்டால வைஸ்ராயைத்தாம் நேரில் போய்ப் பார்க்கத் தயாரென்று காந்திஜி கூறினார்.

இந்தியாவின் எதிர்கால அரசியல் சம்பந்தமாக ஸர் நூன் ஒரு திட்டத்தை ஸமர்ப்பித்திருக்கிறார். ஆனால் அத்தகைய யோசனைகளை வெளியிட இது சரியான சமயமல்ல என்று அவர் கூறியிருக்கிறார். ஆகவே அவர் ஏன தமது திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார் என்பது புரியவில்லை. காங்கிரஸ் கடைசியாக வெளியிட்டுள்ள திட்டத்தை அவர் ஒருவாறு ஆதரித்திருக்கிறார். காங்கிரஸ் திட்டத்தைக் குலைப்பதற்காகவே அவர் தமது திட்டத்தை வெளியிட்டிருக்கிறார் போலும்.

ஸர் பிரோஸ்கானின் திட்டம் பொருளாதாரச் சுமைக்கு வழி தேடுவது மட்டுமின்றி இந்தியாவை ஒன்றுபடுத்துவதாகக் கூறி, உண்மையில் அதைத் துண்டிக்கிறது. இக்கொள்கையை அங்கீகரித்துவிட்டால் பிற்பாடு அந்தப் பித்து வளர்ந்துகொண்டே போகும். மாகாணங்களை மெம்பர்களாகவுடைய மத்திய ஸ்தாபனம் ஒன்றை நிறுவுவது சாத்தியமில்லையா? ஒரு டொமினியனாக அமைவதற்கு இரண்டு மூன்று மாகாணங்கள் ஒன்று சேர வேண்டுமா?

காங்கிரஸ் கடைசியாக வெளியிட்டுள்ள திட்டம்தான் யாவற்றினும் சிறந்தது. தமது திட்டத்துக்கோ அன்றி வேறெந்தத் திட்டத்துக்கோ முஸ்லிம் லீக் ஹிந்து மகாசபை இவற்றின் அங்கீகாரத்தைப் பெற ஸர் பிரோஸ் முயலவேண்டும். இவ்விரண்டு ஸ்தாபனங்களும் அங்கீகரிக்கும் எந்தத் திட்டத்தையும் ஏற்பதில் காங்கிரஸுக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

நபுண்சகத் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி. யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.

குணமடைந்த சந்தோஷம்

ஜம்மி வேங்கட்ரமணய்யாவின் "லிவர்க்யூர்" தான் இக்குழந்தையை ரக்ஷிக்க முடியும்.

ஜம்மி'ஸ் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு "லிவர்க்யூர்" சிறந்த நிவாரணியென பிரக்யாதி பெற்ற டாக்டர்களால் கருதப் படுகிறது. சென்ற 36வருஷ காலமாக இக்கொடிய வியாதியினின்றும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது.

அபாயகரமான போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

ஜம்மி வேங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

48, பெரிய தெரு, கும்பகோணம்.

அட்டைப் படம்

"ஏக் ராத்" (ஓர் இரவு) என்ற ஹிந்தி படத்தில் நடிக்கும் நீனாவும் ப்ருத்வி ராஜும்.

சீவக சிந்தாமணி-12.

சிறையும் விடுதலையும்

★

—வ். வேணுகோபாலன் எழுதியது—

கட்டியங்காரனுடைய பட்டத்து யானையான அசனிவேகம், சீவகனால் அடக்கப்பட்டது முதல் உணவுண்ணாமலும் உறங்காமலும் கண்ணீரொழுகக் கோபத்துடன் நின்று கொண்டிருந்தது. பகைவனுக்குத் தோற்றுப் புறங்காட்டிய வேந்தனைப்போலத் தலையைத் தொங்கவிட்டுப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. பல நாளாக யானை, உணவும் உறக்கமில்லாமல் வருந்தியிருப்பதை அறிந்த கட்டியங்காரன் பாகனை அழைத்து, "யானைக்கு உண்டாகிய துன்பம் என்ன?" என்று கோபத்துடன் கேட்டான். கட்டியங்காரன் கோபத்துடனிருப்பதைப் பார்த்த பாகன், மனங் கலங்கி, நீர் விளையாட்டன்று சீவகனால் யானை அடக்கப்பட்ட செய்தியை விரிவாகக் கூறினான்.

பாகன் கூறிய மொழியைக் கேட்டவுடன், கையோடு கையை மோதிக் கண்கள் கனலக் கடுங்கோபமுற்றான். உடனே தன் மைத்துனன் மதனனைக் கூப்பிட்டான்.

"மதனா! பசுக்களுக்காக வேடரோடு பொருது வென்றதையும், இசைப்போருக்கு வந்த அரசர்களை வென்றதையும் எண்ணி இன்று என்னுடனும் போர் செய்ய நினைந்து என் யானையை அடக்கின செட்டி மகனை, ஓடிப் பிடித்துவாருங்கள்! அவன் ஆண்மையை அழித்துவிடுகிறேன்" என்று கட்டியங்காரன் கட்டளையிட்டான். கட்டியங்காரனைக் காட்டிலும் பன்மடங்கு கோபம் கொண்ட மதனன், வீரர் நூற்றுவருடன் சீவகனைப் பிடித்து வரப் புறப்பட்டான். யமதூதர்களைப்போல ஆயுதங் தாங்கியவர்களாய் மதனனும் வீரரும் சீவகன் மாளிகையில் புகுந்தனர். உமையும் உருத்திரனும்போல சீவகனும் குணமாலையும் ஒன்றாய்க் கூடியிருந்த மாளிகையில் வீரர் புகுந்தவுடன், சேடியர் ஓடிச்சென்று சீவகனிடம், "அரசன் வீரர் வருகின்றனர்" என்று தெரிவித்தனர். அதற்குள்ளாகச் சிங்கத்தைப்பிடிக்க வந்த நரிக் கூட்டங்களைப்போல் மதனன் முதலிய வீரர், உள்ளே வந்துவிட்டனர்.

சீவகன், சேடியர் சொல்லையும் வீரர் ஆரவாரத்தையும் கேட்டுக் கோபம் கொண்டு, ஆண் சிங்கம் பெண் சிங்கத்துடன் குகையிலிருந்து புறப்படுவதுபோல் குணமாலையுடன் பள்ளியறையினின்றும் வெளிப்பட்டான். வீரர்களைக் கண்ட குணமாலை இடியுண்ட சிறு பாம்புபோல நடுக்கமுற்று நின்றாள். வீரர்களின் முகக் குறிப்பால் அவர்கள் வந்த காரியத்தை அறிந்த சீவகன், வில்லையும் அம்பறாத் தூணியையும் கையில் தாங்கினான். இங்கு வந்த காரியத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்டான் தலை நிமிர்ந்து:

'எனக்கடங்காமல், அனங்கமாலையை விரும்பியவரும், என் யானையை அடக்கி அரசர் தொழிலை நடத்துகின்றவருமான சீவகனுக்கு வாழ்நாள் இன்றோடு முடிவுற்றது. அவனைச் சிறைபிடித்து வருக,' என்று எம் அரசன் கட்டளையிட்டான். ஆதலால் அரசன் பாதத்தை அடைய வருக" என்று மதனன் ஏவலால் சில வீரர்கள் மொழிந்தனர்.

கட்டியங்காரன் இட்ட கட்டளையைக் கேட்டதும், திரிபுரமெரித்த முக்கண்ணன் போல் சீவகன் புன்னகை செய்து கண் கனலப் பார்த்தான்; "நந்தட்டா! கட்டியங்காரன் வாழ்நாள் முடிவுற்றது; நீ போய்த் தேரைச் சித்தம் செய்வாயாக" என்று சீவகன் நந்தட்டனுக்குக் கட்டளையிட்டான். நந்தட்டன் சீவகன் மொழிப்படி விரைந்து சென்றான்.

சீவகன் யானையை அடக்கியதால் கட்டியங்காரன் கோபங் கொண்டு வீரர்களை அனுப்பியதையும் சீவகன் மாறாகப் போர்க்கோலங்கொண்டு கோபித்து நிற்றலையும் பார்த்த கந்துக்கடன் மனங் கலங்கினான். 'கட்டியங்காரனோடு பகை கொள்ளல் பெருந் தீங்கு தரும். அவனுக்கு அடங்கிக் கட்டுப்பட்டுச் சென்றால் கோபம் நீங்குவான்; அதுவே சீவகன் செய்யத்தக்கது" என்று நிச்சயம் செய்தான் கந்துக்கடன்.

கோபத்துடன் நின்று போர் செய்வதைப்பற்றி எண்ணிய சீவகன், 'கட்டியங்காரனோடு ஒரு வருடம் முடியும் வரையில் பகைகொள்ளேன்' என்று அச்சணந்தியாசிரியரிடம் தான் கூறியிருப்பதை நினைந்து போர் செய்தலைத் தவிர்ந்து பொறுமையுடன் நின்றான்.

சீவகன், கோபம் தணிந்திருப்பதைக் கண்ட கந்துக்கடனும் சுநந்தையும் இது நல்ல தருணமென்றெண்ணி, "சீவக! அரசனுக்கு அடங்கிக் கட்டுப்படுதலே இப்போது நன்மை தரும்; எங்களுக்காக உன் வீரத்தையும் வன்மையையும் நீ அடக்கிக் கொண்டு கட்டியங்காரனிடம் சென்றால் உலகம் உன் ஆண்மையைக் குறைகூறி இகழாது" என்று கூறினர்.

சீவகன், தன் ஊழ்வினையை எண்ணி, கட்டியங்காரனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டான். உடனே மதனன் முதலியவர்கள், சீவகனைச் சூழ்ந்து சிறைப்படுத்தி அழைத்துச் செல்ல முற்பட்டனர்.

குணமாலையும் சுநந்தையும் நிலத்தில் வீழ்ந்து வாய்விட்டு அரற்றுவதைக் கண்ட சீவகன் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வீரருடன் நடந்து சென்றான். சீவகன், கட்டியங்காரனுடைய வீரர்களால் சிறைப்பட்டு வீதி வழியே செல்லுதலைக் கண்ட நகர மாந்தர் கண்ணீர் விட்டு வருந்தினர். சீவகன் பெருமைக்கு இது குறை என்று வருந்தினர்.

"நாகரிகனான சீவகனை நாம் பார்த்தால், சிறைப்பட்டுச் செல்லும் அவன் நம்மைப் பார்க்க வெட்கப்படுவான். ஆதலால் அவனைப் பார்க்காதீர்கள்" என்று பலர் மொழிந்தனர்.

"சீவகனுக்கு இந்தத் தீவினை ஏன் வந்தது" என்று கூறினர் சிலர்.

"சீவகன் கோபித்து எழுந்தால், மதனனும் வீரரும் உயிருடனிருப்பரோ" என்று பேசிக் கொண்டனர் பலர்.

"இவன் உலகத்தையே காக்கப் பிறந்தவனாயிற்றே" என்று பலர் இரங்கிச் சொல்லினர்.

இவ்வாறு நகர மாந்தர் பேசுவதைக் கேட்ட சீவகன் மனமகிழ்ந்து, "என்முன் நிற்க யமனும் அஞ்சுவான். ஆதலின் மண்ணுலகத்து என்முன் நிற்பவரில்லை; சிங்கத்தைக் கொல்வது எளிது. என்னை வெல்ல முடியாது; நீங்கள் வருந்த வேண்டாம்" என்று ஆறுதல் கூறிச் சென்றான். சிலம்பி நூலால் கட்டப்பட்ட சிங்கம் போல் சீவகன் செல்வதைக் கண்ட நகரமாந்தர் துக்கக்கடலில் அழுந்தினர்.

* * * *

கட்டியங்காரனுடைய கோபத்தைத் தணிக்க எண்ணிய கந்துக்கடன் பன்னிரண்டு கோடி பொற்காசுகளைக் கொண்டு சென்று அவன் பாதத்தில் குவித்து வணங்கினான்.

"அரசே! தங்கள் யானை பெண்ணைக் கொன்றால் அந்தப் பழி தங்களை அடையுமே என்று சீவகன் யானையை அடக்கிப் பெண்ணைக் காத்தான். இவ்விதம் செய்தது நீதியன்றோ! இது நீதியல்லாது போனால் உலகத்தில் நீதியென்பது வேறு என்ன இருக்கிறது?" என்று கந்துக்கடன் மொழிந்தான். அதற்கு மறுமொழி கூறாமல் கட்டியங்காரன் இருந்தான்.

"அரசே! உயிரைக்காத்தல் அரசன் கடமை யென்பதை அறியாத சீவகன், முன்பு பசுக்களைக்காத்து உங்களுக்கு வெற்றி தந்தது போல் இக்காரியத்தையும் செய்தான். இது குற்றமென்றெண்ணினால் பிழை பொறுக்க வேண்டும்" என்று மீண்டும் சொன்னான் கந்துக்கடன். அதற்கும் மறுமொழி சொல்லாமல் கோபத்துடன் அமர்ந்திருந்தான் கட்டியங்காரன்.

"அரசே! எனக்குத் தொன்று தொட்டு வந்த பொருள்களையெல்லாம் தந்து விடுகிறேன். சீவகன் பிழையைப் பொறுத்து அவனை விட்டு விடுக" என்று வேண்டிக் கொண்டான் மீண்டும். அதுகாறும் வாய் பேசாதிருந்த கட்டியங்காரன் கடுங் கோபத்துடன் கந்துக்கடனை விழித்துப் பார்த்தான்.

"கந்துக்கடா! உலகமறியும்படி சீவகனால் வருந்தியிருக்கும் என் யானை அசனிவேகத்தின் தந்தமாகிய எழுத்தாணியால், அவன் மார்பாகிய ஓலையில் என் வெற்றியை எழுதுவிப்பேன். நீ வருந்தாமல் வீடு செல்: இனி சீவகனைக் கனவிலும் எண்ணாதே" என்று கர்ச்சித்தான் கட்டியங்காரன்.

'சீவகனை யானையால்கொல்லுவிப்பேன்' என்று கட்டியங்காரன் குறிப்பு மொழியால் கந்துக்கடன் அறிவு கலங்கி விஷமுண்டவன் போலானான். பின்னர் முனிவன் முன்பு கூறிய மொழியை நினைந்து ஆறுதலடைந்தவனாய் தன்மாளிகைக்கு வந்தான். அழுது கொண்டிருந்த சுநந்தை, கந்துக்கடனைக் கண்டதும் "சீவகன் நிலை என்ன ஆயிற்று?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"சுநந்தை! வருந்தாதே. முன்பு நம் வீட்டிற்கு அதிதியாக வந்திருந்த முனிவன், சீவகன் நமக்குக் கிடைக்கப் போவதையும், அவன் பிறப்புத் தொடங்கித் துறந்துபோகும் அளவும் நடக்கும் காரியத்தையும் கூறிய பின்னர், 'இகழும் துன்பமும் உண்டு; உங்களால், அவன் வீரம் கட்டுப்பட்டுச் சிறைப்படுவான். அப்போது அவனை ஓர் யக்ஷன் எடுத்துப் போவான். எட்டு மாதங்களுக்கு பின்னர் அவனைக் காண்பீர்கள்' என்று மொழிந்து சென்றான். ஆதலால் வருந்தாதே" என்று கந்துக்கடன் சொன்னான். உயிரற்ற பிணம் போல் இருந்த சுநந்தையும் குணமாலையும் கந்துக்கடன் கூறிய முனிவன் மொழியால் ஆறுதலுற்று வருத்தம் நீங்கினர்.

* * * *

சீவகன் சிறைபட்டானென்று கேட்ட பதுமுகன் முதலிய தோழர் துயரக்கடலில் ஆழ்ந்தனர், எல்லாருக்கும் கட்டியங்காரன் மீதும் மதனன் மீதும் கோபம் உண்டாகியது. பதுமுகன் கோபத்துடன் ஒற்றியும் ஒரு வீரனை அழைத்து, "சீவகன் நிலையை அறிந்துவா!" என்றனுப்பினான்.

பின்னர் தோழர்களைப் பார்த்து, "நண்பர்களே! கட்டியங்காரனாகிய கழுதை சீவகனாகிய புலியைச் சிறைப்படுத்திவிட்டானென்று நினையாதீர்; கந்துக்கடனும் சுநந்தையுமே, சீவகனைச் சிறைப்படும்படி செய்திருப்பர்" என்று பதுமுகன் கூறும்போது, ஒற்றறியச் சென்ற

(10-ம் பக்கம் பார்க்க)

பண்டைக்காலப் போர் முறை

முற்றுகை

★

தி. நா. சுப்ரமணியம்
எழுதியது

★

நம் நாட்டு புராண இதிகாசங்களிலும் காவியங்களிலும் பண்டைக் காலத்து முன்னோர்கள் நிகழ்த்திய போர்களின் வரலாறு விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் பாரதக் கதை ஒன்றைத் தவிர, மற்ற நூல்களில் போர் எப்படி ஆரம்பிக்கப்பட்டது, படைகளை எந்த விதமாக வியூகம் அமைத்து நடத்தினர், ஒவ்வொரு தினமும் யுத்தரங்கத்தில் யார் யார் முன்னின்று சண்டையிட்டனர், தந்திரங்களை எந்த விதமாகக் கையாண்டு வெற்றி பெற்றனர் என்பன போன்ற விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டப்படவில்லை.

எனினும் அத்தகைய வரலாறுகள் முற்றும் மறைந்து போகவில்லை. சரித்திர ஆதாரங்களில் அங்கங்கே சிதறுண்டு கிடக்கின்றன. அவற்றைத் திரட்டி பார்த்தால்தான் ஏதாவது கொஞ்சம் கோவையாகச் சொல்லமுடியும்.

பண்டைக் காலங்களிலே நாட்டின் வெற்றி தோல்வியோ கோட்டை முற்றுகையின் முடிவைப் பொறுத்ததாகவே இருந்தது. இரு தரப்புப் படைகளையும் சமவெளிகளில் நிறுத்தி வைத்து அவை கைகலந்து போர் செய்யும் வழக்கம் ஏதோ சில சமயங்களில் தான் நடந்திருக்கிறது. அத்தகைய சம்பவங்கள் பெரும்பாலும் சரித்திரப் பிரசித்தமானவை. நம் நாட்டுச் சரித்திரத்தின் ஆரம்ப யுத்தமாகக் கருதப்படும் ஸிந்து நதிக்கரை யுத்தத்திலிருந்து கடைசிமுறையாக நடந்த பானிப்பட்டு யுத்தம் வரையில், அவைகளைக் கூறலாம். கிரேக்க மன்னன் அலெக்ஸாந்தரும் புருஷோத்தமனும் நிகழ்த்திய போர் துங்கபத்திரை நதிக் கரையில் தக்ஷிணத்தின் ஸுல்தான்களுக்கும் விஜயநகர சக்கரவர்த்திக்கும் இடையே நடந்த ராக்ஷஸதக்கடி யுத்தம், பழைய குருக்ஷேத்திரமான பானிப்பட்டில் நடந்த சண்டைகள், வங்காள நவாபுக்கும் ஆங்கிலேயக் கும்பனியாருக்கும் பிளாஸி என்னுமிடத்தில் நடந்த போர் முதலியவை சமவெளியில் நடந்த போர்கள்.

இந்தப் போர்களைப்பற்றிய விவரங்கள் கிடைத்தாலும நாம் விரும்பும் அளவு இல்லை. அந்தப் போர்களை நடத்தியவர்கள் கையாண்ட தந்திரங்கள் முழுவதையும் நாம் அறியச் சரியான வழியில்லை.

போர் நீடிக்காததேன்

நம் நாட்டு மன்னர்கள் சமவெளியில் நிகழ்த்திய யுத்தங்கள் பெரும்பாலும் அதிக நாள் தொடர்ந்து நடக்கவில்லை. அவை சீக்கிரமே முடிவடைந்தன. அவ்விதம் முடிந்ததற்கு அவர்கள் கையாண்ட முறையே காரணம்.

அவர்கள் சாதாரணமாகத் தங்கள் முழுபலத்தையும் கொண்டு, எதிரிகளைத் தாக்குவர். அந்தத்தாக்குதலில் அங்கே கூடியிருக்கும் போர் வீரர் எல்லோரும் கலந்துகொள்வர். எதிரிகள் தங்களைக்காத்துக் கொள்வதுடன் தாக்குபவர்களையும் எதிர்த்து அடிப்பர். அநேகமாக அந்தத்தாக்குதலின் முடிவே போரின் முடிவாக இருந்துவிடும். முதல் தாக்குதலில் வெற்றிகொண்டவர்களே போரில் வென்றவர்கள் ஆவர்.

முதல்தாக்குதல் பெரும்பாலும் காலாட்படையைக் கொண்டே நடக்கும். அவர்கள் கைசளைக்கும் சமயத்தில் குதிரைப் படையினரும் யானைப்படையினரும் பின்னால் வருவர். இதனைக் கவனிக்கும்போது யுத்தரங்கத்தில் முதலில் காலாட்களும் அவர்களுக்குப் பின்னால் குதிரைப்படைகளையும் மூன்றாவதாக யானைப்படையினரும் அணிவகுத்து நிற்பர் என்பது தெரிகிறது.

மத்தியகாலத்தில் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வழக்கில் வந்த பிறகு, அவை முக்கியமானவைகளாக மாறின. காலாட்படை முதலில் தாக்க ஆரம்பித்தவுடனே எதிரிகள் தங்கள் பீரங்கிகளைக்கொண்டு குண்டுமாரி பொழிவர். தாக்குபவர்களிடையே அது பெருஞ் சேதத்தை விளைவிக்கும். இவர்களும் பதிலுக்குத் தங்கள் பீரங்கிகளைக் கொளுத்தி எதிரிகளை விரட்டுவர்.

இவ்விதம் ஒரே யடியாகத் தாக்குவதில் ஒரு ஸௌகரியமும் உண்டு. அடியின் வேகத்தைத் தாங்காமலும், எதிரியின் பலத்தைக் கண்டு பயந்தும் தங்களிடையே நேரிடும் சேதத்தைக் கண்டு திகைத்தும் எதிரிகள் பல சமயங்களில் கலங்கி புறங்காட்டி ஓடிப் போரை இழந்துவிடுவது உண்டு. முதலில் ஏற்பட்ட அதைரியத்தைச் சமாளித்துக்கொண்டு போரை நடத்துவது வெகு துர்லபம்.

கிருஷ்ணதேவர் நடத்திய யுத்தம்

கிருஷ்ணதேவராயர் தாம் நடத்திய யுத்தங்களிலே இந்த முறையையே முழுமையும் பின்பற்றவில்லை. பாரதக் கதையில் நாம் பார்ப்பதைப் போன்ற சில மாறுதல்களைச் செய்திருக்கிறார். உதாரணமாக அவர் ராயச்சூரில் நடத்திய போரைக் குறிப்பிடலாம்.

அங்கே அவர் தம் படையை ஏழு பிரிவுகளாக வகுத்தார். முன்னணியிலிருந்த இரண்டு வியூகங்களே தாக்குதலை ஆரம்பித்தன. மற்ற ஐந்தும் பின்னால் நின்றன; முன்னணி வியூகங்கள் தாக்க ஆரம்பித்தவுடனே தக்ஷிணத்து ஸுல்தான்களுடைய பட்டாளம் அதன் பீரங்கிகளைக் கொண்டு குண்டுகளைப் பொழிந்தன. முதலில் தாக்கிய வியூகங்கள் அதன் வேகத்தைத் தாங்க முடியாமையாலும், தங்களிடையே அதிக சேதம் நேரிட்டபடியாலும் பின்னடைந்தன.

அதனைக் கண்டவுடனே தக்ஷிணத்துப் படை முன்னேறி விஜயநகரத்தாரைத் தாக்க ஆரம்பித்தது. அவர்கள் குதிரைப் படை விரைந்து வந்து, தீவிரமாகத் தாக்கியது. அதனால் விஜயநகரத்துப் படையில ஏராளமான சேதம் ஏற்பட்டது. ஆயினும் அவ்விதம் முன்னேறியதால் தக்ஷிணத்துப் படையின் வியூகம் குலைந்துவிட்டது. அணிவகுத்தபடியே வரமுடியவில்லை.

ராயர் அதை எதிர்பார்த்தே காத்திருந்தார். தக்க சமயம் வந்துவிட்டது என்று ஏற்பட்டவுடனே அவர் தாம் பின்னால் நிறுத்திவைத்திருந்த மற்ற ஐந்து வியூகங்களையும் முன்னேறிச் சென்று எதிர்க்கவும், அவர்களை விரட்டியடிக்கவும் உத்தரவிட்டார். முடிவில் ராயருக்குப் பெருத்த வெற்றி கிட்டியது.

இத்தகைய தந்திரங்களைச் சிற்சில சமயங்களிலேயே கையாண்டிருக்கிறார்கள்.

முக்கியமான யுத்த முறை

பண்டைக்காலத்து யுத்த முறையில் கோட்டைகளைப் பிடிப்பதே முக்கியமானதாக விளங்கி வந்தது. அதனால் ஒவ்வோர் அரசாங்கமும் அதன் கோட்டைகளை நன்றாகப் பாதுகாத்து வந்திருக்கிறது. கோட்டைச் சுவர்களின் மீது பலவிதமான ஆயுதங்களை ஏற்றி அவற்றால் தாக்குவோரை எதிர்ப்பார்கள்.

கோட்டைச் சுவர் மீது நிற்போர், வில், அம்பு முதலியவற்றையும் வேல், ஈட்டிகளையும் வைத்து நிற்பர். தாக்க வரும் எதிரிகளை அவற்றால் அடித்து விரட்டுவர். பல சமயங்களில் பெரிய பாறைகளை ஏற்றி வைத்திருந்து எதிரிகள் சமீபமாக வந்தவுடனே அவர்கள் மீது உருட்டுவார்கள். அவ்வளவையும் தாண்டி அவர்கள் சமீபித்து விட்டால் கத்தி கொண்டு வீசி வெட்டித் தள்ளுவார்கள்.

கோட்டைக் கதவுகள் மிகவும் கனம் உள்ளனவாக இருக்கும். அவற்றை எளிதில் தள்ள முடியாது. எதிரிகள் தங்கள் யானைகளைக்கொண்டு அவற்றை முட்டச் செய்து இடித்துத் தள்ளுவார்கள். அவ்விதம் யானைகள் முட்டுவதைத் தடுக்கப் பல சமயங்களில் கதவுகளில் கூரிய முனைகளுள்ள குமிழிகளைப் பொருத்தியிருப்பர். யானைகள் மதம் கொண்டு அந்த முள் முனைகளையும் லட்சியம் செய்யாமல் முட்டும். அதனால் அவற்றின் மத்தகங்களிலிருந்து ரத்தவெள்ளம் பெருகி வழியும். வேறு சில சமயங்களில் போர்வீரர்கள் யானைகளை ஏவி விடாமல், உலக்கை போன்ற கனமான பொருள்களைக் கொண்டு கோட்டைக் கதவுகளை இடித்துத் தள்ளுவதும் உண்டு.

கோட்டைகளைக் கைப்பற்றுவதற்குப் பலவேறு முறைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் தாக்குபவர்கள் சுவர் ஏறி உள்ளே குதித்து, எதிர்ப்பவர்களை முறியடித்துக் கோட்டையைக் கைப்பற்றியிருக்கின்றனர். மத்தியகாலங்களில் கோட்டையில்லாத இடங்களில் அந்தந்த ஊர்க்கோயில்களையே கோட்டைகளாக உபயோகித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுக் கோயில்களில் பல இன்றைக்கும் அவ்விதம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கோட்டைக் காவல்

கோட்டைக்காவல் பலமாக இருக்குமிடங்களில் தாக்குபவர்களால் அதனை நெருக்க முடியாது. அன்றி கீழேயிருந்து உயரத்தில் கோட்டைச்சுவர்மீது இருப்பவர்களைத் தாக்குவதும் கஷ்டமாக இருக்கும். அந்தக் காலங்களில் கோட்டைக்குப் பக்கத்தே கொஞ்சம் தள்ளி மணலைக் கொணர்ந்து நிரப்பி முட்டாடி மதில் அளவு உயரம் எழுப்புவார்கள். அப்பால் அதன் மீது ஏறிச் சமமாக நின்று போர் புரிவர்.

பல கோட்டைகளைச் சுற்றி அகழ் இருக்கும். அந்த இடங்களில் எதிரிகள் அதனைத் தாண்டிக் கோட்டையை நெருங்க முடியாது. அக்காலங்களிலே அகழியைத் தூர்த்து விடுவார்கள்.

செய் அகழியாக இல்லாமல் சில சமயங்களில் ஆறுகளே அரணாக அமைவது உண்டு. ஆற்றில் வெள்ளப்பெருக்கு உள்ள காலத்தில் அதனைக் கடந்து கோட்டையைக் கிட்ட முடியாது. அப்போது ஆற்றின் கரையை உடைத்து வெள்ளத்தைத் திருப்பி விடுவர். இல்லாவிட்டால், ஆற்றுக்குப் பல கால்வாய்களை வெட்டி நீரை வேறு வழிகளில்செலுத்துவர். கிருஷ்ணதேவராயர் இவ்விதம் ஒரு சமயம் ஓர் ஆற்றினின்றும் ஐம்பது கால்வாய்களை வெட்டி நீரைத் திருப்பி விட்ட செய்தி தெரிய வருகின்றது.

சில சமயங்களில் கோட்டையை முற்றுகையிட்டவர்கள் தாங்கள் வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கையாலோ அல்லது எப்படியும் தாங்கள் வெற்றி கொள்வது என்ற முடிவு செய்வதைப் பிறருக்கு அறிவிப்பதற்காகவோ, எக்காளம் முதலிய தங்கள் ராஜசின்னங்களுள்

(10-ம் பக்கம் பார்க்க)